<u>சுருக்கம்</u>

தொலைபேசி - நகர்மன்ற தலைவர்களின் அலுவலகம் மற்றும் வீடுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொலைபேசிக் கட்டண வரம்பு திருத்திய - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (ப) எண்.216 நாள்: 17.4.2000

படிக்கப்பட்டது:

1. அரசாணை (ப) எண்.508, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்;17.9.98
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.ந.க. எண்.91432/99/எல்.3, நாள்;25.1.2000

----

<u>ஆணை:</u>

முதலில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர் மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் வீடுகளிலுள்ள தொலைபேசிகளுக்கு கீழ்க்கண்டவாறு உச்சவரம்பிற்குட்பட்டு STD வசதி செய்து கொடுக்க அனுமதியளிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது:-

(இரு மாதங்களுக்கு)

| | |
|---|---|
| 1.மன்ற தலைவர் அலுவலக தொலைபேசி | -- ரூ.4250/- |
| 2. மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் வீடுகளுக்கு | -- ரூ.2150/- |

2. மயிலாடுதுறை மற்றும் இராஜபாளையம் நகர்மன்ற தலைவர்கள் அவசர அவசியம் கருதி சென்னையிலுள்ள துறைத் தலைவர்களுடனும், மற்ற மன்றத் தலைவர்களுடனும், அலுவலக பிரிவுத் தலைவர்கள் மற்றும் அலுவலக

பணியாளர்களுடனும், நகர் மன்றத் தலைவர்கள் தங்கள் வீட்டிலிருந்து தொடர்பு கொள்ள வேண்டிய நிலை அடிக்கடி ஏற்படுவதால் அலுவலகத்தைவிட சில சமயங்களில் வீட்டிலுள்ள தொலைபேசியில் உபயோகம் அதிகமாகவுள்ளதாகவும், நகர்மன்றத் தலைவரின் வீடு மற்றும் அலுவலக தொலைபேசி இரண்டிற்கும் தனித்தனியே உச்சவரம்பு நிர்ணயம் செய்யாமல் இரண்டிற்கும் சேர்த்து இரு மாதங்களுக்கும் ரூ.6400/-க்குள் பயன்படுத்த திருத்திய ஆணை வெளியிடக் கோரியுள்ளனர். இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், இராஜபாளையம் மற்றும் மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர்களின் கருத்துக்களை அரசுக்கு தக்க ஆணைக்காக பரிந்துரை அனுப்பியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ள முடிவெடுத்து, ஏற்கனவே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட 17.9.98ம் நாளிட்ட இத்துறையின் அரசாணை (ப) எண்.508ஐத் திருத்தி நகர்மன்ற தலைவரின் தொலைபேசிக் கட்டணங்களை நகராட்சி ஏற்றுக் கொள்ள நிர்ணயிக்கப்பட்டிருந்த வீட்டிற்கு ரூ.2150/- (ரூபாய் இரண்டாயிரத்து நூற்றி ஐம்பது மட்டும்) அலுவலகத்திற்கு ரூ.4250/- (ரூபாய் நாலாயிருத்து இருநூற்று ஐம்பது மட்டும்) என்ற உச்சவரம்பை இணைத்து, வீடு மற்றும் அலுவலக தொலைபேசிகளுக்கான ஒருங்கிணைந்த உச்சவரம்பாக ரூ.6400/-(ரூபாய் ஆறாயிரத்து நானூறு மட்டும்) நிர்ணயம் செய்து அரசு இவ்வா ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. மாலதி,
அரசு செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.5
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை.104
அனைத்து நகராட்சி ஆணையர்கள் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
நகல்: நகராட்சி நிர்வாகம் மற்றும் (வ.செ.) குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9

/ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர் 17/5/2000